1979-6-27
PERIODICAL DIVISION
LIBRARY

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 ஆனி: 14 ஷஃபா: 2 இதழ்: 136
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-6-79

## கேகாலை மாணவர்களின் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 500 மாணவர்களின் நல்லெண்ண தூது கோஷ்டி. பெளன்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின தலைமையில் ஜூலை மாதம் 25ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறது.

கல்விஅமைச்சரும் மாணவர் குழுவும், ஜூலை 26, 27ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள்.

மாணவர்கள், விடுமுறை பாசறை நிகழ்ச்சியிலும் பங்கு கொள்வார்கள்.

கல்வி அமைச்சரையும் மாணவர் குழுவினரையும் வடமாநிலக் கல்வி அதிபர் திரு. திரு. தி. மாணிக்கவாசகர், மற்றும் வடமாநில கல்வி உத்தியோகத்தர்கள் வரவேற்பார்கள். மாணவர்கள் குழுவினர் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஜூலை 25ம் திகதி காலையிலிருந்து மாணவர்குழு புறப்பட்டு, யாழ்ப்பாணத்தை வந்தடையும். ஜூலை 26ம், 27ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள். ஜூலை 28ம் திகதி கேகாலைக்குப் புறப்படுவார்கள். (ஈ)

# யாழ். டாக்டர்கள் திடீர் வேலைநிறுத்தம்!

## நோயாளர்கள் பாதிப்பு!!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்றுக்காலைதிடீரென ஆரம்பித்தவேலைநிறுத்தத்தினுல் யாழ். பெரிய ஆஸ்பத்திரியின் சகல வேலைகளும் ஸ்தம்பிதமடைந்து, நோயாளிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளானுர்கள்!

நேற்று முன்தினம், யாழ் பெரியாஸ்பத்திரியில் பதில் நீதவானும் யாழ். திடீர்மரண விசாரணை அதிகாரியுமான திரு. எஸ். எஸ். பிரான்ஸ்சிசுக்கும் டாக்டர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறின் எதிரொலியாகவே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

### தாக்கமுயன்ருராம்

சம்பந்தப்பட்ட டாக்டர், யாழ். வைத்திய அத்தியட்சகருக்கு சம்பவம்பற்றி அனுப்பியுள்ள மகஜரில்; மரண விசாரணை அதிகாரி திரு எஸ். பிரான்சிஸ் தன்னைதாக்க முயற்சித்ததாகத் தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில்மேலும் கூறப்பட்டிருப்பதது:

### டாக்டரின் மகஜர்

"மரண விசாரணை அதிகாரி திரு. பிரான்சிஸ் யாழ். ஆஸ்பத்திரியின் மூன்ரும் வார்ட்டுக்குச் சென்று ஒரு நோயாளியின் டிக்கட்டை தாதி ஒருவரிடம் கேட்டார். அந்த டிக்கட், பதினைந்தாம் வார்ட்டில் இருப்பதாக அறிந்த திரு. பிரான்சிஸ், அங்குசென்ருர் இதனை அவதானித்துக் கொண்டிருந்த நான் தொலைபேசிமூலம் 15ம் வார்ட்டிலிருக்கும் டிக்கட்டை என்னிடம் அனுப்பும்படி கூறினேன். தொலைபேசியில் பதில் கிடைக்காமற் போகவே, நேரில் டிக்கட்டைப் பெறும் பொருட்டுச் சென்ற போது அங்கு திரு. பிரான்சிஸ் அந்த டிக்கட்டைப் பார்வையிடுவதைக்கண்டதும், "இதில் நீர் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? நீர் இதைப் பார்வையிட முடியாது." என்று கூறினேன். உடனே திரு பிரான்சிஸ் "அதைக்கூற நீர் யார்?" என்று கேட்டார்.

"இந்த வார்ட்டிற்கு நான் தான் பொறுப்பானவர் என்னுடைய அனுமதியின்றி நீர் இங்கு வந்ததும் இதைப்பார்த்ததும் தவறு" என்று நான் கூறினேன். உடனே அவர் "நான் மரண விசாரணை அதிகாரி என்னைத் தடுக்க உம்மாலென்ன, யாராலும் முடியாது. நான் இந்த ஆஸ்பத்திரியின் எந்த வார்ட்டிற்கும் எப்பொழுதும் வருவேன்" என்று கூறியவாறு என்னைத் தாக்க எத்தனித்தபோது, அவருடன் வந்திருந்த ஒரு

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாநகர சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது மாதாந்தக் கூட்டம் ஜூலை மாதம் 6-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு மேயர் திரு இ. விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## சர்வதேச கமிஷன் பத்திராஜவுக்கு அழைப்பு

(கொழும்பு)

முன்னுள் இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசரும் அரசியலமைப்பு நீதிமன்ற நீதியரசருமான திரு. ஜெயா பத்திராஜ சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றில் அங்கம் வகிப்பதற்காக அழைக்கப்படுள்ளார்.

தென் ஆபிரிக்க நிறத்துவேஷ ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்ய இருக்கும் விசாரணைக் கமிஷனிலேயே திரு பத்திராஜ அங்கம் வகிப்பார்.

இக்கமிஷன் விசாரணை பெல்ஜியம் தலைநகரான புருசெல்ஸில் ஆரம்பமாகும்.

## டாக்டர் என்னை அவமதித்தார்

### பதில் நீதவான் பிரான்சிஸ் பொலிஸில் புகார்

[யாழ்ப்பாணம்]

"பார்வையாளர்கள் நேரத்தில் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்ற என்னை, நான் யார் என்று தெரிந்து கொண்டும் வேண்டுமென்றே அனுமதிக்க மறுத்து, என்னை அவமதித்து மரியாதைக் குறைவாக டாக்டர் சுந்தரநாதன் என்னைப் பேசினுர். இதனைத் தொடர்ந்து எனக்கும் அவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் நீடித்ததே தவிர, குறிப்பிட்ட இந்த டாக்டரை நான் தாக்கவோ, தாக்க முயற்சிக்கவோ முயலவில்லை"

இவ்வாறு பதில் நீதிவானும், திடீர் மரண விசாரணை அதிகாரியுமான திரு. எஸ். பிரான்சிஸ், பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"பார்வையாளர்களின் நேரத்தில், நண்பகல் 12-10-க்கும் 12-30-க்குமிடையே நான் ஒரு நோயாளியைப் பார்வையிட மூன்ரும் வார்ட்டுக்குச் சென்றேன். இந்த நோயாளி 15-ம் வார்ட்டில் இருப்பதாகக் கூறினுர்கள் ஆஸ்பத்திரி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு வைத்திலிங்கத்தை தொடர்பு கொண்டு, வார்ட்டுக்குள் சென்ற போது, டாக்டர் சுந்தரநாதன் என்னைத் தடுத்தார். நான் 'யூனிபோம்' அணிந்திருந்ததைக் கண்டும் இந்த டாக்டர், வேண்டுமென்றே என்னுடன் தகராறுக்கு வந்தார். "பார்வையாளர் நேரத்தில் நான் எங்கு வேண்டுமானுலும் வரலாம்" என்று கூறியபோது வாக்குவாதம் அதிகரித்தது, இதனைத் தொடர்ந்து இங்கிருந்து வெளியேறிய நான், யாழ் பதில் வைத்திய அதிகாரி டாக்டர் தனபாலசிங்கத்திடம சென்று விஷயத்தை தெளிவாகக் கூறினேன், விபரம கேட்ட அவர், 'இது ஒரு சின்னவிஷயம், பாரதூரமாகக் கருத வேண்டாம' என்று கூறி என்னை அனுப்பிவைத்தார்" என்று பதில் நீதிவான் திரு எஸ் பிரான்ஸிஸ் தமது பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

### புகார் மீது விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ் பெரியாஸ்பத்திரிடாக்டர் ஒருவர் செய்த புகாரைத் தொடர்ந்து யாழ் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ் பிரான்ஸிஸ் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

ப. நோ. கூ. ச. ஊழியர்

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று மேற்கொள்ளவிருந்த வேலைநிறுத்தம கைவிடப்பட்டது.

கூட்டுறவு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் அவர்களின் போராட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்து பல பொதுஸ்தாபனங்கள் மாவட்ட அமைச்சர், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கு தந்திகளும் அனுப்பியிருந்தனர். கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் கூட்டுறவுச்சங்க நெறியாளர் குழுவினரின் கவனத்துக்கு இவ்விஷயத்தைக் கொண்டு வந்தபோது அவசரமாக நேற்று முன்தினம் கூடிய நெறியாளர் குழு அவர்களின் கோரிக்கைகளை வழங்குவதென்றும் முடிவு செய்ததைத் தொடர்ந்தே ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர். [கோ]

## கல்லூரி மாணவி கடத்தல்; மூவர் சரணடைந்தனர்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறையில் இடம் பெற்ற மாணவி கடத்தல் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்ட இருநபர்களும் கார்ச்சாரதியும் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி மாணவி ஒருவர் கல்லூரிக்குச் சென்றுகொண்டிருக்கையில் காரில் வந்த இனந்தெரியாதவர்களால் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டதும், பின்னர்பொலிசார் தேடுதல் நடத்தி அளவெட்டியில் நபர் ஒருவருடன்வைத்து மாணவியை மீட்டதும் தெரிந்ததே.

மேற்படி நபரான சின்னத்துரை செல்வராசா மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டதுடன் மேலும் இருநபர்களையும் கார்ச்சாரதியையும் பொலிசார் தேடிவந்தனர்.

சின்னத்துரை துரைராசா, கந்தன் செல்வராசா ஆகிய நபர்களும் கார்ச்சாரதியான கந்தையா குணராசாவும் மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் சரண் புகுந்தனர். இவர்களை ஜூலை 2ம் திகதி மட்டும் றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

## விடத்தல்தீவு கொலைவழக்கு

### விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(வவனியா)

விடத்தல்தீவு கொலை வழக்கில், விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில், நீதிபதி எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில், 75ம் ஆண்டு ஏப்ரல் 20ம் தேதி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விடத்தல்தீவில், 68 வயதான முகமது சுல்தான் என்பவரை நித்திரையில் வைத்துச் சுட்டுக் கொலை செய்ததாக அவரின் பிள்ளைகளான செய்னுதீன் [வயது 26], லாபீர் [வயது 24] ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனகமனோகரன் ஆஜராஞர். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜராஞர்.

விசாரணை நடுவில், முரண்பாடுகள் காரணமாக வழக்கைத் தொடர்ந்து நடத்த வில்லையென ஜூரிகள் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். [ச]

# மனிதனின் ஏழு பருவங்கள் இன்று மேடையேறுகிறது



திருமதி புனிதம் மகேசன் தயாரித்தளிக்கும் 'மனிதனின் ஏழு பருவங்கள்' என்ற நாட்டிய நாடகம் இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது.

யாழ் வளாகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் கே. கைலாசபதியும் துணைவியாரும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்ளும் இந்நிகழ்ச்சி யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி விவசாயப் பண்ணை நிதிக்காக நடைபெறுகிறது.

இந்த நாட்டிய நாடகத்தில் 5 வயதுக் குழந்தையாக 'பரதசூடாமணி' செல்வி வ. சுசி சண்முகம்பிள்ளையின் மாணவி உமையாள் விஜயரட்ணமும், அவரின் தாய் தந்தை ராக சங்கீதா நமசிவாயம், சங்கரி சிவப்பிரகாசம் ஆகியோரும் தோன்றும் காட்சியை மேலே காண்கிறீர்கள்.


வெளிவந்துவிட்டது

G. C. E. A/L ஒகஸ்ட் 79

**விலங்கியல்**

முன்னோடி வினாத்தாளுக்கான

**மாதிரி விடைகள்**

விலை ரூபா 3/-

ஆசிரியர்:
கலாநிதி கா. சித்திரவடிவேலு

விற்பனை
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பதிப்பு
செட்டியார் அச்சகம்,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

2887



வட்டுக்கோட்டைத் தொகுதிப்
பேருந்துப் பிரயாணிகள் சங்கம்

**1-வது ஆண்டுப் பொதுக்கூட்டம்**

இடம்: பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை
காலம்: 01-07-79 முற்பகல் 10-00 மணி
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

இ. சங்கர்,
பொதுச்செயலாளர்.

சுழிபுரம். 2886



**பரதநாட்டியம்**

குமாரி ஜெயகௌரி நகுலேந்திரன் அவர்கள்

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம்: 3 -06-79 சனிக்கிழமை மாலை 6-30 மணி

பிரதம அதிதி: திரு. ஆர். விசுவநாதன் அவர்கள்
முதல்வர் மாநகரசபை, யாழ்ப்பாணம்.

சிறப்பு அதிதியாக சென்னை நுண்கலைக் கல்லூரி அதிபர் 'பரதசூடாமணி' அடையாறு ஸ்ரீ கே. லக்ஷ்மண் அவர்களும் கலந்து கொண்டு நட்டுவாங்கம் செய்யவிருக்கிறார்.

ரிக்கற் விபரம்: 25/-, 15/-, 10/-, 5/-.

ஆறுமுகம் கந்தையா,
பொதுச்செயலாளர்

சைவச்சிறுவர் இல்லம்,
கைதடி 2875



பச்சிலைப்பள்ளி
பல. நோ. கூ. சங்கம்.
பளை.

**வெற்றுச்சாக்கு, கழிவு பொருட்கள் கேள்வி விளம்பரம்**

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பொருட்கள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன:

வெற்றுச்சாக்குகள் — 4000
கழிவு மாவு
கழிவு சீனி
கழிவு தேயிலை
கழிவு பவுடர் ரின்கள்

ரூபா 100/- (நூறு) சங்கத் தலைமை அலுவலகத்தில் கட்டி கேள்விப்பத்திரப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கெனவே 100/- கட்டிய விண்ணப்பதாரர் இம்முறை கட்டத் தேவையில்லை. கேள்விப்பத்திரங்கள் யாவும் 12-07-79-ந் திகதி காலை 10 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபால் மூலம் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி
பல நோ. கூ. சங்கம்,
பளை.

26-06-1979. 2883



பருத்தித்துறை
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டுள்ளது)
பருத்தித்துறை.

**பதவி வெற்றிடம்**

நெசவுசாலை
முகாமையாளர்

மேற்படி பதவி வெற்றிடத்திற்குக் கீழ்காணும் தராதரங்களையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. யாழ்மாவட்ட எல்லைக்குள் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. நல்லூர் நெசவுசாலை பயிற்சிப் பத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும் அல்லது
3. நெசவுசாலையொன்றின் ஆசிரியராக அல்லது முகாமையாளராகக் கடமையாற்றிய அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
4. வயதெல்லை: 20 வயதிற்கும் 35 வயதிற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும். சிறுகைத் தொழில் இலாகாவில் நெசவு ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியவர்கட்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.
5. நெசவு ஆசிரியைகட்கு முதலிடம் வழங்கப்படும்.
6. வேதனம்: சிறு கைத் தொழில் இலாகாவின் சட்டப்படி வேதனம் வழங்கப்படும்.

தகுதியுடையோர் 10-7-79-ந் திகதிக்குப் பிந்தாமல் "தலைவர், பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் மனுச் செய்யவும்

பொது முகாமையாளர்,
பரு. நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை.

26-06-79 2884



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆனையிறவு உப்பளத்திற்கு அருகாமையில் கண்டி, யாழ்ப்பாணம் பிரதான வீதி அருகில், கல்வீடும் கிணற்றுடன் $8\frac{1}{4}$ ஏக்கர் வயல்நிலமும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: V. S. துரைரெத்தினம், 18, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 2882

வவுனியாவில் நெல் அரிக்குற்றும் மில் காணியுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 38, ஸ்ரேசன்றோட், வவுனியா. அல்லது கி. மனோரஞ்சிதன், குரும்பசிட்டி, தெல்லிப்பளை. 2863

உயர்ரக பட்டு, நூல்புடவைகள், கவரிங் காப்பு, மின்னி, தோடு வகைகள்- குலசேகரம் கடை, யாழ். வீதி, வல்வெட்டித்துறை. 2864

### தவறிவிட்டது

செல்வராசா சிவலிங்கம் என்பவரின் டயறியும் ஸ்கூட்டர் ராண்ஸ்வர் புத்தகம், லைசென்ஸ் இன்சூரன்ஸ், ராக்ஸ் போன்றவை யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 18-6-79ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் "செ. சிவலிங்கம் யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 10/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்தில் ஒப்படைத்து தகுந்த சன்மானம் பெறவும். 2891

### பிறந்தநாள் வாழ்த்து

அரங்கேசன்

கொட்டடி கண்ணபுரம் சுந்தரலிங்கம் - செல்வராணி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் அரங்கேசன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று 28-6-79 வியாழக்கிழமை கொண்டாடுகிறார். இவர் நலமுடன் நீடு வாழ பெற்றோர், தாத்தா நடராஜா மாமன்மார் யோகராஜா, கனகராஜா, சிற்றப்பா சௌந்தரராஜன், அத்தை கனகேஸ்வரி மற்றும் உற்றார் உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள். 2889

### தேவை

தையல் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2885, C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 2885


## இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலி



செ. ஸ்ரீமகேசன்

தோற்றம்: 4-2-1943

மறைவு: 28-6-1977

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டீர்கள். நீங்கள் தந்த வாழ்வை நீங்கள் காட்டிய வழியில் நிறைவு செய்வோம். அன்பரே என்றென்றைக்கும் எமக்கு வழிகாட்டுவீர்களாக. உங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்
அச்சுவேலி வடக்கு.

2842

# "அரசியல் வாதிகளின் தலையீடு அதிபர்களுக்கு இருக்கக் கூடாது"

## பிரிவுபசார விழாவில் பேராயிரவர்

[யாழ்ப்பாணம்]

"அரசியல்வாதிகளின் அவசியமற்ற தலையீடில்லாமல் இன்றைய அதிபர்கள் ஓரளவு சுதந்திரத்துடன் செயற்படக் கூடிய சூழ்நிலை உருவாகவேண்டும்" என்று முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பேராயிரவர் கூறினார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து இளைப்பாறிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பேராயிரவருக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது. தமக்களிக்கப்பட்ட விருந்து வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப்பேசுகையிலேயே திரு. பேராயிரவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் தனிப்பட்ட முறையில் பிரத்தியேகமான சலுகைகளுக்காகவோ, நோக்கங்களுக்காகவோ கல்லூரிகளையும், அதிபர்களையும் பயன்படுத்தாது அதிபர்கள் தங்கள் சேவைகளைத் தடையின்றிச் செய்வதற்கு உதவிசெய்யும் சாதனங்களாக இருக்கவேண்டியது அவசியம்.

எந்த ஒரு கல்லூரியும் ஒரு தனிப்பட்ட தன்னலங்கருதும் ஒரு குழுவினரின் விளையாட்டுப் பொருளாக அல்லது ஒரு பொழுதுபோக்குச் சாதனமாக மாறக்கூடாது. கல்லூரிகள் சமுதாயத்தின் சொத்துக்கள். அவை இத்தகையோர் கைகளில் சிக்கிவிடக்கூடாது".

அதிபர்கள் சங்கத்தலைவர் திரு ஈ. கே. சண்முகநாதன் பேசுகையில் அதிபர் பேராயிரவர் ஆசிரியத்தொழிலுக்கும் வடமாகாண அதிபர் சங்கத்தின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தார் என்றார்.

திரு. ஆ. நடராசா பேசுகையில், ஓய்வு பெறும் அதிபர் திரு பேராயிரவர் ஒரு தலைசிறந்த அதிபராக இருந்ததுடன் மாத்திரமல்லாது மாணவர் - ஆசிரியர் நல்லுறவை வளர்ப்பதற்கும் ஒரு கருவியாக இருந்தார். அவருடைய சேவை எமக்குச் சிறந்த எடுத்துக்காட்டு" என்றார்.

திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், என். சபாரெத்தினம், எஸ். அம்பிகைபாகன், எஸ். சிவபாதசுந்தரம் ஆகிய இளைப்பாறிய அதிபர்களும் பேராயிரவரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

வடமாகாண அதிபர்கள் சங்க நடப்பாண்டு நிர்வாகக் குழுத் தேர்வின்போது பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஏ. நடராசா, உபதலைவர்: திரு. பி. எஸ் குமாரசுவாமி, காரியதரிசி: திரு சின்னையா சிவநேசன், உப-காரியதரிசி: திரு எஸ் பத்மநாபன், பொருளாளர்; திரு சி. குணபாலசிங்கம் [கொ-கு]

வடமாகாண அபிவிருத்திச்சபை

# தமிழ்மொழி அமுல் பற்றி அமைச்சர் இராசதுரைக்குச் சிலயோசனைகள்

## இதுவரை தமிழுக்கு உரியஇடம் அளிக்கப்படாதது பற்றிக்கவலை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புத் திட்டத்தின்கீழ் தமிழ் மொழி அமுலாக்கத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கான வழிவகைகள்பற்றிய மகஜரொன்றை வடமாகாண அபிவிருத்திச் சபைக்குழு பிரதேச அபிவிருத்தி, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையிடம் கையளித்துள்ளது. சபைத் தலைவர் திரு. கனகசூரியரும் செயலாளர் திரு. கே. எஸ். மகேசனும் கைச்சாத்திட்டு வழங்கியுள்ள அம்மகஜர் விபரம் வருமாறு:-

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பு, முன்னைய அரசியலமைப்புகளிலும் பார்க்கத் தமிழ் மொழிக்குக் கூடிய அந்தஸ்து வழங்கியிருக்கிறபோதிலும், நடைமுறையில் கடந்த இரு ஆண்டிலும் தமிழுக்குப் போதிய அந்தஸ்தும் உரிமைகளும் கிடைக்கவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அரசியலமைப்பில், தமிழ் மொழி தேசிய மொழியாகவும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிருவாக மொழியாகவும் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறபோதிலும் ஏட்டுச் சுரைக்காய்போலத் தமிழ் மொழி பலவிதமாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதை நாங்கள் சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது. புதிய அரசியலமைப்பிற்கிணங்க தமிழ்மொழி அமுலாக்கத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, தங்களுக்கு வடமாகாண அபிவிருத்திச்சபை சில யோசனைகளைக் கூற முன்வந்துள்ளது.

1. இந்த நாட்டில் தமிழும் சிங்களமும் தேசிய மொழிகளாக இருப்பதினால், சிங்களத்துக்கு அரசரீதியில் எவ்வளவு மதிப்புண்டோ, அதற்குச் சரிசமனாக தமிழ் மொழிக்கும் அரசரீதியில் மதிப்புக் கிடைக்கவேண்டும். தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராதிகார சபைகளின் உறுப்பினர்களும் தமிழ் மொழியில் பேசவும் பணியாற்றவும் சகலவிதமான வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும். இதற்கு வேண்டிய நிருவாக அமைப்பையும் வரப்பையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதன்பொருட்டு பாராளுமன்றத்திலும், உள்ளூராட்சிச் சபைகளிலும் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்களைக் கணிசமான அளவில் நியமித்து ஊக்களிக்கவேண்டும்.

2. தமிழிலும் சிங்களத்திலும் எவரும் கல்வி கற்க, அரசியலமைப்பு அதிகாரமளிக்கின்றது. ஆனால் தமிழ்மொழி மூலம் முன் கற்பிக்கப்பட்ட பல பகுதிகள் ஒவ்வொன்றும் படிப்படியாக மூடப்பட்டுவருகின்றன. உதாரணமாகச் சமூகசேவை இலாகாவினால் தமிழிலும், சிங்களத்திலும் நடாத்தப்பட்டு வந்த சமூக சேவை டிப்ளோமா படிப்பு கடந்த ஆண்டு தொடக்கம் தனிச் சிங்களத்திலேயே நடாத்தப்பட்டுவருகின்றது. தமிழ் பேசும் மாணவர்கள் சிங்களத்திலேயே இந்தப் படிப்பை நடாத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தமிழ் மாணவர்கள் இந்த டிப்ளோமா பரீட்சையை என்ன மொழியில் எழுதவேண்டும் என்று தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே எந்த அரசாங்க ஸ்தாபனத்திலும் நடாத்தப்படும் கற்கை நெறி சிங்களத்தில் இருப்பதுபோல் தமிழிலும் பாரபட்சமின்றி நடாத்தப்படவேண்டும். பிரவேச அனுமதிக்கு தமிழிலோ ஆங்கிலத்திலோ பரீட்சை நடாத்தி; பின்கற்கை நெறியை தனிச் சிங்களத்தில் நடாத்தும் முறை முற்றாக நிறுத்தப்படவேண்டும். எந்த மொழியில் தேர்வுப் பரீட்சை நடாத்தப்படுகிறதோ, அதே மொழியில் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

3 அரசியலமைப்பு வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழ்மொழி நிருவாக மொழியாக அனுமதித்துள்ளது ஆனால் நடைமுறையில் இதை அமுலாக்க வடக்கிலும் கிழக்கிலும் ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்தை அமைக்கவேண்டும் என்றும் ஆலோசனை கூறுகிறோம். இப்படிப்பட்ட பிராந்திய அலுவலகத்தின்மூலமே வட-கீழ் மாகாணங்களில் தமிழ் மொழியை நிருவாக மொழியாக அமுலாக்க முடியும். அரசியலமைப்பு அதிகாரம் கொடுப்பதினால், தமிழ் மொழி வடக்கிலும் கிழக்கிலும் கட்டாயப்படுத்தி நிருவாக மொழியாக அமுலாக்க வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும். பிராந்திய அடிப்படையில் தமிழ் மொழியை நிருவாக மொழியாக அமுல் செய்ய, தேசிய மொழி அமுலாக்கல் கமிஷனர் ஒருவரையும் பதில் கமிஷனர் இருவரையும் நியமித்து அவர்கள் மூலம் அமுலாக்கல் வேலையை துரிதப்படுத்துமாறு வேண்டுகிறோம்.

4. அரசியலமைப்புரை 22 இன்படி தமிழ்மொழிக்குகொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தை அந்த உறுப்புரையில் காணப்படும்ஒவ்வொரு சொற்களின் வரைவிலக்கணத்தின்படி அமுலாக்கப்பலபிரச்னைகள் ஏற்படுமெனினும், இத்தகைய அமுலாக்கத்தை கொண்டுவருவது உங்களுடைய பொறுப்பாகும். அரசியலமைப்பு, உறுப்புரை 22 இன்படி தமிழ்மொழிக்கு அந்தஸ்து கொடுத்தால், தமிழ்மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் கணிசமான உரிமைகள் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

5. புதிய அரசியலமைப்பின்படி ஒவ்வொரு தமிழ் பேசுபவரும் தத்தம் மொழியில் அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளவும் அதேமொழியில் அரசாங்கத்திடமிருந்து பதிலைப் பெறவும் உரிமையுடையவர்களாக இருக்கிறார்கள் ஆனால் நடைமுறையில், தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கும் தனிச்சிங்களமொழியிலேயே அரசாங்கத்திடமிருந்து பதில்கள் வருகின்றன. அரசியலமைப்பு தமிழ் மொழிக்கு மரியாதை செலுத்தினாலும் அதை அமுலாக்குபவர்கள் அசட்டைசெய்கிறார்கள். இப்படிப்பட்ட வேண்டப்படாத செயல்களாலேயே தமிழ்மக்கள் விரக்தியடைகிறார்கள். அரசியலமைப்பின்படி தமிழ் மொழிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தைப் பங்கப்படுத்தும் எந்தச் சக்திகளுக்கும் சட்டப்படி தண்டனை கொடுக்கவேண்டும்.

6. எங்களுடைய அரசியலமைப்பின்படி, சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட, அல்லது வழங்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், பிரகடனங்களும், விதிகளும், துணைவிதிகளும், ஒழுங்கு விதிகளும், அறிவிப்புகளும், ஏதேனும் பகிரங்கநிறுவனத்தினால் வழங்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் சுற்றறிக்கைகளும் படிவங்களும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படவேண்டும். ஆனால் நடைமுறையில் பல வெளியீடுகள் தமிழ்மக்களுக்குப் புரியாத தனிச்சிங்கள மொழியிலேயே பிரசுரிக்கப்படுகின்றன. இதனால் தமிழ் மக்களுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய பல உரிமைகளும், சந்தர்ப்பங்களும் மறுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக பிரதமர் காரியாலயத்தில் இருக்கும் வெளிநாட்டுப் பயணத்துக்கு அனுமதிகோரும் பத்திரம் தனிச்சிங்களத்திலேயேயுண்டு. இதனால் சிங்களம் தெரியாத மக்கள் பலர் அலைவதையடைகிறார்கள். ஆகவே நீங்கள் பிரதமரோடுஉரையாடி, மேற்கூறப்பட்ட வெளியீடுகள் இனிமேல் தமிழில் பிரசுரிக்க வழிவகைகள் செய்யவேண்டும்.

7. பகிரங்கசேவை, நீதித்துறை சேவை உள்ளூராட்சிச் சேவை பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட முறையான நிறுவனமென்பனவற்றுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கான ஏதேனும் பரீட்சையில், தமிழ்பேசும் மக்கள் தமிழிலேயே பரீட்சிக்கப்படவேண்டுமென்று அரசியலமைப்பு வழிவகுத்திருக்கிறபோதும், நடைமுறையில் இந்த உரிமை மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதைவிட சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற தமிழ்மக்களுக்கும் சலுகை கிடைப்பதில்லை. இதைவிட அரசகருமமொழியில் தேர்ச்சிபெற தமிழ்மொழியைப்பேசும் மக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட கால எல்லை மிகக்குறைவானதாலும் தன் தாய்மொழியன்றிப் பிறமொழியில் ஆற்றலைப்பெற குறைந்த பட்சம் பத்துவருடங்கள் தேவை. இந்தக் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் சிங்களமொழியில் தேர்ச்சிபெறாத தமிழ் ஊழியர்களுக்கு நிகழ்ந்திருக்கும் கஷ்டங்களை நிவர்த்திசெய்ய தாங்கள் ஆவன செய்யவேண்டும்.

8. மேலும், அரச நிறுவனங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் பெயர்ப்பலகைகள், சைகைப்பலகைகள் பெரும்பாலும் சிங்களமொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இதனால் தமிழ்மக்கள் ஒரு அலுவலகத்திற்கு செல்லவேண்டியிருந்தால், அவர் போகும்போது சிங்களம் தெரிந்த ஒருவரையும் கூலிக்குப் பிடித்துக்கொண்டு போகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது, சிங்களப் பலகைகளோடு தமிழிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

மக்கள் கருத்து

### பொறுப்பற்ற பேச்சு

அண்மையில் கொழும்பில் அகில இலங்கைச் சித்த ஆயுர்வேத சம்மேளனத்தின் 50-வது ஆண்டுவிழா நடைபெற்றது. இதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வட இலங்கைச் சித்த ஆயுள்வேத காங்கிரசின் அமைப்பாளர் மூளாந்திரம் ஈ. பீ. இராசையா அங்கு பேசுகையில் "சிங்களவர் அங்கு வந்தால் புலிகள் ஓடிவிடும்" என்று பேசியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி கூறியிருந்தது, இதன் அர்த்தம் என்ன? இப்படியான பொறுப்பானர்கள் பொறுப்பற்றதனமாகப் பேசலாமா? 1977 ஆகஸ்டில் நடந்ததை அவர் அதற்குள் மறந்துவிட்டாரா? இனியாவது இப்படியான பேச்சுக்களைப் பேசி அரசியல் லாபம் பெறவேண்டாம் என எல்லோரையும் கேட்டுக் கொள்கின்றேன். ஐக்கிய இலங்கையை விரும்புவதாகக் கூறும் இவர்கள் இப்படிப் பேசுவது மாறான பலனையே ஏற்படுத்தும்.

இ. பத்மாகரன்
அரியாலை.

# யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சிகள்

### சிலசமயம் தெளிவாக இருக்காத காரணம் என்ன?

[யாழ்ப்பாணத்தில் இந்தியாவிலிருந்து கிடைக்கும் தொலைக்காட்சிகள் சில சமயம் தெளிவாகவும் சில சமயம் தெளிவில்லாமலும் இருப்பதின் காரணமென்ன? இதற்கு விளக்கம் தருகிறார். இலங்கை மின்சார சபை [சுன்னாகம்] உதவி மின் பொறியியலாளர் திரு தி. ஸ்ரீஸ்கந்தராசா].

சென்ற சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் பலரிடையே தொலைக்காட்சி மோகம் ஏற்பட்டிருப்பதை அறியக்கூடியதாய் உள்ளது. ஆங்காங்கே சிற்சில இடங்களில் வானளாவி நிற்கும் அலைவாங்கிகள் இதற்குச் சாட்சி யாழ் சுப்பிரமணியம் பூங்காவிலும் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்படி அமைக்கப்பட்டிருக்கும் கருவிகள் மூலம் சில தினங்களாக அண்டைநாடான இந்தியாவிலிருந்து வரும் நிகழ்ச்சிகளை பலர் கண்டுகளித்தனர். சினிமாப் படங்கள் கூட தெளிவாகத் தெரிந்தன, ஆனால் இவை சீராக தினமும் கண்டுகளிக்கக் கூடிய வகையில் இல்லை. அலைவாங்கிகளின் உயரம் பற்றாக்குறை; திசை சரிவர அமையாதது; மின் அழுத்தம் குறைவு. இப்படிப் பல காரணங்களை சிலர் கதைத்துக்கொண்டனர். இது ஓரளவில் உண்மையே. எனினும் முக்கியமாகதொலைக்காட்சி ஒலிபரப்புநிலையம் ஆகக்கூடிய தூரம் 80 மைலுக்குள்ளாகவாவது இருத்தல் வேண்டும்.

தொலைக்காட்சி அலைகள், ஒளியைப்போன்று நேர்க்கோட்டிலேயே விரைகின்றன. இவ்வலைகள் விரையும் வழியில் மரங்கள், கட்டிடங்கள், காற்றினால் எழுப்பப்படும் தூசுகள், முகில்கூட்டங்கள் முதலியன தடையாக இருப்பின் இவை சக்தி குன்றிவிடுகின்றன. ஆகவே பல 100 மைல்களுக்கப்பால் இவை செல்வதானால் இத்தடைகள் இருக்கக்கூடாது இயற்கைத்தடைகளான மரங்கள் முகில் கூட்டங்கள் முதலியனவும் செயற்கைத்தடைகளான கட்டிடங்கள், ஆலைகளிலிருந்து வெளியேறும் புகைமண்டலங்கள் இந்த அலைகளின் சக்தியை வெகுவாகப் பாதிக்கின்றன மேலும் கட்டிடங்கள் சுற்பாறைகளில் இவை மோதி வேறு திசைகளில் தெறிக்கவும் செய்கின்றன.

இப்படியான சூழ்நிலையில் இந்தியாவிலிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் சமிக்ஞைகளை நாம் பெற்றுக்கொள்வது ஒரு சாதாரண விஷயமல்ல. ஏனெனில் சீரான சீதோஷ்ணநிலைதான் இதற்குக் காரணம் எனக் கூறலாம். ஆனால் இந்தச் சூழ்நிலையை எப்போதும் எதிர்பார்க்கமுடியுமா? முடியாது. இதனால்தான் அனேகமாக இந் நிகழ்ச்சிகளை நாம் பார்க்கமுடிவதில்லை. ஒளிபரப்பி கிட்டத்தட்ட 80 மைல்களுக்குள் இருந்தால் தடைகள் ஓரளவு இருப்பினும் சமிக்ஞைகள் தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்குவனவாய் இருக்கும். இதை அறியாது சிலர் ஆயிரக்கணக்காக பணத்தைச் செலவிட்டு இந்திய நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையில் தொலைக்காட்சிக் கருவிகளை அமைக்கின்றனர். சில அலைவாங்கிகள் 60 அடி உயரத்தில் கூட அமைந்திருப்பதைப் பார்த்திருக்கின்றேன் அத்தோடு பூஸ்டர் எனும் கருவியும் பொருத்தப்படுகின்றது. இது அலைகளின் சக்தியை வலுப்படுத்தி தொலைக்காட்சிப் பெட்டிக்கு அனுப்புகிறது. எது எப்படி இருப்பினும் இந்தியாவிலிருந்து வரும் சமிக்ஞைகள் கிட்டத்தட்ட 300 மைல்களுக்கப்பால் இருந்தே வருகிறது. இதை எப்போதும் சீராக நாம் பெற்றுக்கொள்ள முடியாது. மேலும் இச் சமிக்ஞைகள் யாழ்ப்பாணத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் அனுப்பப்படுவதும் இல்லை. ஏதோ சில நாட்களில் காலநிலை சீராக இருக்கும்போது எம்மால் நிகழ்ச்சிகளைப் பார்க்கமுடிகிறது அத்தோடு சரி. இந்தநிலையில் அதிக பணச்செலவில் தொலைக்காட்சி அமைப்பது சரியென்று எனக்குப் படவில்லை. ஓரிரு நாட்களைத் தவிர மற்றைய நாட்களில் ஏமாற்றமே கிட்டும்.

இலங்கையில் தற்பொழுது கொழும்பிலும் கொழும்பை அண்டியுள்ள இடங்களிலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. காலப்போக்கில் இதை அரசு விரிவாக்கும்போது ஆங்காங்கே அஞ்சல் நிலையங்கள் அமைக்கக்கூடும். அவ்வமயம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கண்டுகளிக்கலாம். இதை யாழ்ப்பாணத்துத் தொலைக்காட்சி ரசிகர்கள் உணர்வார்களாக.

# ரஷ்ய மொழியில் தென்னாலிராமன் கதைகள்

மாஸ்கோ, ஜூன் 27

தென்னாலிராமன் கதைகள், மரியாதை ராமன் கதைகள் உட்பட பல தென் இந்திய நாட்டார் இலக்கியங்கள் அடங்கிய தொகுப்பொன்று ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டுள்ளது.

சக்ரவர்த்தி விஜயநகர் கிருஷ்ண தேவராயர், அவரது பிரதம சகபாடி அப்பாச்சி ஆகியோர் பற்றிய ஹாஸ்யக் கதைகளும் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

இவற்றுள் 'மரியாதை ராமன்' கதைகள் ரஷ்யவாசகர்கள் மத்தியில் பெரு வரவேற்பினைப் பெற்றுள்ளன.

இதுபற்றி மேற்படி தொகுப்பின் முன்னுரையில் பிரபல சோவியத் தமிழ் அறிஞர் ஏ. இப்ராஹிமோவ் தென் இந்திய நாட்டார் இலக்கியத்தின் சிறப்பம்சமான ஜனநாயகப் பண்பினை இத்தொகுப்பிலடங்கியுள்ள கதைகளில் காணக் கூடியதாக இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார். அர்த்தமுள்ள நகைச்சுவையினைக் கையாள்வதில் தமிழர்களுக்கு இருக்கக் கூடிய திறமையினை இக்கதைகளின் வாயிலாக உணர முடிந்தது என்றும் இப்ராஹிமோவ் குறிப்பிடுகிறார்.

அண்மையில் ருஷ்ய மொழியில் வெளியாகிய ''யமனை வென்ற சாவித்திரி'' ருஷ்ய வாசகர்கள் மத்தியில் பெரு வரவேற்பினைப் பெற்றது என்பதும் இதன் 50,000 பிரதிகள் ஏற்கனவே விற்பனையாகியுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

ஊரடங்கு உத்தரவை

## மீறிய 500 பேர் விடுதலை

புதுடில்லி, ஜூன் 27

உத்தரப் பிரதேசம் - அலிகட்டில் ஊரடங்கு உத்தரவை மீறியதாகக் கைதுசெய்யப்பட்ட 500 பேரும் மாநில அரசின் உத்தரவின்பேரில் பிணையில் விடுதலைசெய்யப்பட்டனர்.

---

## ஈரானில் கலகம் 10 பேர் பலி!

தெஹ்ரான், ஜூன் 27

ஈரானின் குர்திஷ்டா மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற கலகத்தில் 10 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

---

## திருவாசக விழா நாளை

[புலோலி]

தென்புலோலியூர் சாரையடி வீரபத்திரர் ஆலய முன்றலில் நாளை வெள்ளிக்கிழமை திருவாசக விழா நடைபெறவுள்ளது.

இத்திருவாசக விழாவிலே கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணன் மிஷன் வித்தியாலயத்தைச் சேர்ந்த பிர. இரத்தினசபாபதி ''இறைவனை வணங்கிய தலை'' என்னும் பொருள் பற்றியும், புலோலி மேற்கு மாதர் சங்கத்தலைவி திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் ''திருவாசகத்தின் சிறப்பு'' என்னும் பொருள் பற்றியும் 'சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். [இ]

---

## தொண்டமான் திறந்து வைத்தார்

[காலி]

கிராமிய கைத்தொழில், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான் காலியில் 'லக்சல' விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துவைத்தார்.

லக்சல'வுக்கான கட்டிடத்தை அரசு சுமார் 2 லட்சம் ரூபா செலவில் அமைத்திருந்தது. [இ]

---

250 மைல் வேகத்தில்

# பூமியில் விழும் 'ஸ்கைலாப்'

## ஜூலை 11-ம் திகதி பூமியைத் தாக்கும்

வாஷிங்டன், ஜூன் 27

விண்வெளியில் செயலற்றுப் போன அமெரிக்க விண்வெளி ஆய்வு கூடமான 'ஸ்கைலாப்' அடுத்தமாதம் 11ம் திகதி பூமியில் விழுமென்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

ஜூலை 10ம் திகதி பூமியின் வாயுமண்டலத்திற்குள் பிரவேசிக்கும் இந்த ஆய்வுகூடம் பூமியில் எங்கே விழுமென்பது அது விழுவதற்கு 24மணித்தியாலத்திற்கு முன்னரே தெரியுமென்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

78½ தொன் எடையுள்ள இந்த ஆய்வுகூடம் 7 ஆயிரம் கிலோ மீட்டர் (4ஆயிரம் மைல் நீளமும் 160 கிலோமீட்டர் (100மைல்) அகலமுமுள்ள பிரதேசத்தில் விழுந்துநொறுங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பூமியிலிருந்து 155 மைல் தொலைவில் இந்த ஆய்வுகூடம் மிதக்கிறதென்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

250 மைல் வேகத்தில் பூமியில் வந்துவிழும் ஆய்வுகூடம் நிலத்தைப் பிளந்துசெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் இந்த ஆய்வுகூடம் கடலில் விழுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

---

## இந்திய அறிஞர் யாழ். வருகிறார்

(நெல்லியடி)

பெங்களூர் பல்கலைக்கழக தமிழ்விரிவுரையாளர் திரு என். கிருஷ்ணமூர்த்தி இலங்கை வரவுள்ளார்.

கரவெட்டி தச்சந்தோட்டு விநாயகர் ஆலயத்தில் ஜூலை மாதம் 30ம் திகதி தொடக்கம் 9ந் திகதிவரை சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காக இவர் விசேடமாக அழைக்கப்பட்டுள்ளார்.

தினமும் மாலை 6 மணிக்கு இவர் தமது சொற்பொழிவை ஆரம்பிப்பார். [இ]

---

## ஆங்கில விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆங்கிலதின விழாவும், ஆங்கிலக் கல்விக் கண்காட்சியும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆங்கில வட்டாரக் கல்வி அதிகாரி திருமதி ஜெ. வாணர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [கா-கு]

---

# ''தமிழர்களை அழிக்க நான் முயல்வதாக சிறிமா கூறினார்'

(கம்பளை)

''1971ம் ஆண்டு நான் தமிழர்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன் என முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா என்மீது பழிசுமத்தினார். அது மட்டுமன்றி என்னைச் சிறைக்கு அனுப்பி தமிழர்கள் கையிலேயே ஒப்படைத்தார். ஆனால் தமிழர்கள் என்னையும் என் கொள்கைகளையும் நன்கு மதித்து என்னை ஆதரித்தார்கள். அவர்களுக்கு என்றும் நான் கடமைப்பட்டவனாவேன்''.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் திரு. ரோகண விஜேவீர கம்பளை நகரசபை மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமது உரையில்: 1973ம் ஆண்டு மத்தியவங்கி அறிக்கையின்படி இந்நாட்டில் 5 பேருக்கு ஒருவர் விதமே வேலையற்றவர்களாக இருந்தனர். ஆனால் இன்று 3 பேருக்கு ஒருவராக வேலையற்றோர் தொகை அதிகரித்துள்ளது. அதேவேளை மக்களின் வாழ்க்கைச் செலவும் நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகின்றது. போதாதற்கு இந்தஆட்சியினர் பதவியேற்ற ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே 70 இலட்சத்திற்கு மேலான பாமரமக்களின் கூப்பன்களை சுவீகரித்துக் கொண்டது. இந்நாட்டில் இன்று 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வாழ வழியின்றி பிச்சைக்காரர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தொழிலாளருக்காக சேவை செய்யவந்துள்ளோம். அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வோம் என்று கூறிய பழம்பெரும் அரசியல்வாதிகளும், தொழிற்சங்கவாதிகளுமான டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போன்றோர் தமது ஓய்வு ஊதியப்பணத்தை மாதா மாதம் வாங்கும் வகையில் சரிசெய்து கொண்டார்களே ஒழிய, தொழிலாளர்களின் நலன் கருதி எந்தச் சேவையையும் செய்துகொடுக்கவில்லை.

''கடந்த 32 வருடங்களாக இந்நாட்டில் 8 பொதுத் தேர்தல்கள் நடந்துமுடிந்தன. அவற்றில் 5 முறைகள் ஐக்கிய தேசியக்கட்சியும், 3 முறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. ஆனால் நடந்தது என்ன? பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்து மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகள் மூலம் ஆட்சிப்பொறுப்பை பெற்றுக் கொண்டவர்கள் மக்களுக்காக எதைச் சாதித்தார்கள். இதனால் இன்று இவ்விருகட்சிகளும் மக்களின் செல்வாக்கை இழந்துவருகின்றன.

1971ம் ஆண்டு நான் தமிழர்களை அழிப்பதற்குநடவடிக்கை எடுத்துவருவதாக முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா பழிசுமத்தியதுடன் என்னை சிறைக்கு அனுப்பி தமிழர்களுடைய கையிலேயே ஒப்படைத்தார். ஆனால் என்னையும் எனது கொள்கையையும் நன்கு மதித்து நடத்தினார்கள். அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். இதேபோன்று 60 வயதிற்கு மேற்பட்டவர்களையும், சிறுவர்களையும் எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் அழித்துவிடும் எனக் கூறி மக்களின் மனதைமாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இன்று குடும்பத்திட்டம் என்ற போர்வையில் இளைஞர்களை அழித்துவருவது இவ்விரு அரசியற் கட்சிகளுமேயாகும்.

கடந்த 32 வருடகாலமாக ஆட்சிசெய்துவரும் இக்கட்சிகள் நமது நாட்டை வெளிநாடுகளுக்கு ஈடுவைத்து வட்டிக்கு கடன்பெற்றுவருவதோடு நம்மையும், நமது இளம் சந்ததியினரையும் கடனாளிகளாகவே ஆக்கியுள்ளன என்றார்.

இக்கூட்டத்தில் திரு உபதிஸ்ஸகமநாயக்கா, திரு. மாடசாமி உட்படப்பலர் உரையாற்றினர்கள். [கா]


# ஒவ்டனேல் ஈ.சீ 50%

தரைப் பூச்சி புழுக்களையும் இலை உண்ணும் பீடைகளையும் கட்டுப்படுத்துவதில் மிகவும் சக்தி வாய்ந்தது ஒவ்டனேல். கம்பிப்புழு, வண்டினங்கள் போன்றவற்றையும் ஒவ்டனேல் ஒழித்துக்கட்டும். உருளைக்கிழங்குப் பயிரைப் பாதிக்கும் வண்டினங்களையும் நெற்சந்துக்குத்தியையும் அது சிறப்பாகக் கட்டுப்படுத்தும். ஒவ்டனேல் வேர்கள் மூலம் உறிஞ்சப்படும் தன்மை கொண்டது. ஆகையால் நிலப்பீடைகள், எறும்பு மற்றும் பூச்சு புழுக்களிடம் இருந்து அதிக பாதுகாப்பை அது வழங்குகிறது.




ஹேக்கெம் லிமிட்டெட்.

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: 93563, 96331-6

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்- பானுமதி
மதுரைவீரன்
(புதிய பிரதி)

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சவுக்கடி
சந்திரகாந்தா

கொட்டகை நிறைந்த 3-வது வாரம்
REGAL Daily at 2-00. 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30, 6-30 & 9-45
ஊட்டிவரை உறவு
ஈஸ்ட்மன்கலர்
29ந் திகதி முதல் ஒ ள வை யா ர்

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
கைகொடுத்த தெய்வம்

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
நடித்த
கண்மணி ராஜா
(புத்தம்புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
(புதிய பிரதி)

ராஜா யாழ் நகர்
இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
ஒ ளி வி ள க் கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

26-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன்: 400
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults. Sex Thrill.

SHANTHI JAFFNA Daily: 4 Shows
(Phone 7642) 10-30, 4-45, 7-00 & 9-30
MGM presents "SWEET REVENGE"
Scope—Color—Action Packed
—more suited for adults.—
Next! "MR. MAJESTYK" Adults only—Color
Dont miss this Action Packed Movie.


# இன்றைய பலன்

ஆனிமாதம் 14-ம் திகதி

[வியாழக்கிழமை]

(28-6-1979)

மேடம்: செய்தொழிலில் சிறப்பான இடம் கிடைக்கும். வெளியூர் அன்பர்கள் உங்களை வரவேற்பதற்குக் காத்திருப்பர். முயற்சிகளுக்கு தெய்வத்தின் துணையுண்டு, நிதியில் திருப்தி உண்டு.

இடபம்: வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது. கடந்த சில நாட்களாக நிலவி வந்த தளக்க நிலையில் இன்று நல்ல திருத்தம் ஏற்படும். பிறந்தகத்திலிருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

மிதுனம்: கடமையின் மூலம் சிறப்படைவீர்கள், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், தொழில்சம்பந்தமாக வெளியூருக்குப் பயணமாகலாம், செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

கடகம்: ஏக்கத்தின்சாயல் தாக்கும், எதிர்பாராதவிதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும், உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும், நிதானம் வேண்டும்.

சிங்கம்: இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள், பொருள் வரவுக்கும் இடமுண்டு, சுற்றுடலில் மதிப்பு உயரும். பெரியோர்களே உங்கள் ஆலோசனைகளைக் கேட்க முன்வருவார்கள், இறையருளும் வேண்டும்.

கன்னி: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம், வீட்டில் சிறுபிணி தலைதூக்கும், சிறிய விடயத்துக்குக்கூட பெரிய கோபம் தோன்றக்கூடும்.

துலாம்: மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு, மனம்போல் வாழ்வு நடக்கும் இன்று, கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

விருச்சிகம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டிபோடும், பண விவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

தனுசு: இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கு இடமுண்டு, எனினும் இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம், அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கண் வைக்கவும்.

மகரம்: சாஸ்திர வழியால் நன்மைகள் வந்துசேரும், குடும்பத்தில் தென்றல் வீசும், கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்கள், செலவினங்கள் கட்டுப்படியாகவேருக்கும்.

கும்பம்: புதிய தலைவிடி தலைதூக்கும், வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும், மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருத்தல் நன்று.

மீனம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும், தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும், கால் நடைவிருத்திக்கும் இடமேற்பட முடியும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## தேவையான பாடசாலைகளுக்கே

# வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கவேண்டும்

### அதிபர்கள் சங்கம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து பாடசாலைக்கட்டிடங்களுக்கு ஒதுக்கப்படும் பணம் முக்கிய தேவையுள்ள பாடசாலைக்கு கொடுக்கப்படாமல் கட்டிடத் தேவையற்ற பாடசாலைகளுக்கு வழங்கப்படுகிறது. இதனால் ஒதுக்கப்பட்ட பணத்தை எப்படியும் செலவு செய்யவேண்டும் என்பதற்காக நல்ல கட்டிடங்களை இடித்து புதிதாக அமைக்கின்றனர். எனவே பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கும்போது அப்பகுதி கல்வி அதிகாரிகளினதும் கல்வித்திணைக்கள கட்டிடப்பகுதிப் பரிசோதகர்களினதும் சிபாரிசுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு எம். பி. க்களையும் கல்வி அதிபரையும் கோருவதென்று இலங்கைவித்தியாலய தமிழ் அதிபர் சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் திரு. அ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் எம். பி.க்களையும் கல்வி அதிபரையும் நேரில் சந்தித்து கலந்துரையாடும் போது கீழ்க்காணும் விடயங்களும் பரிசீலனைக்கெடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது!

சிலபாடசாலைகளில் ஆசிரியர்கள் அளவுக்கு அதிகமாக விரும்புவதால் நேரசூசிகொடுப்பதில் அதிபர்கள் கஷ்டப்படும் அதேவேளையில் வேறு சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பாடசாலைக்கு ஆசிரியர்களே தவிர ஆசிரியர்களுக்குப் பாடசாலை அல்ல என்ற நிலை உருவாகவேண்டும்.

அனேகபாடசாலைகளில் உதவி ஆசிரியர்கள் பதில் அதிபராய் கடமையாற்றுகிறார்கள் ஆனால் தேவைக்கு அதிகமாக ஒன்றுக்கு மேற்பட்ட அதிபர்களும் சில பாடசாலைகளில் இருக்கின்றனர். ஆசிரிய இடமாற்றங்களை அந்தந்தத்தொகுதி எம். பி.க்களின்சிபாரிசிலேயே கல்வித்திணைக்களம் அமுல்படுத்துவதே இந்நிலைக்குக் காரணம். இந்நிலைமாற வேண்டும்" என்பனவாம்.

# தமிழ்மொழி அமுல் பற்றி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்பலகைகள் எழுதப்பட்டிருக்கவேண்டும். இதைவிட, தமிழில் சில இடங்களில் எழுதப்பட்டிருக்கும் பெயர்ப் பலகைகளில் இருக்கும் தமிழ் சொற்கள், தமிழகராதியில் இல்லாதவை. அவைகளை வாசிக்கும் போது அசிங்கமாக இருக்கிறது. தமிழ்ப்பலகைகளை எழுதும்போது தகுதிவாய்ந்த தமிழ் தெரிந்தவர்களின் மேற்பார்வையின் கீழ் எழுதப்படவேண்டும். இத்தோடு விடாமல், சிங்களமொழியிலிருக்கும்பெயரை தமிழில் எழுதி அர்த்தமில்லாத சொற்களைப் பாவிப்பது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். உதாரணமாக "இ. போ. ச."வும், "ஜனவாசம" என்ற தொடர்களை எடுத்துக்கொள்வோம். இ. போ. ச. என்று தமிழில் எழுதினால் எவ்வளவு அழகாக இருக்கின்றது ஆனால் "ஜனவாசம" என்று தமிழில் எழுதி வைத்தால் யாருக்கு விளங்கப் போகின்றது இதற்கு ஆவன செய்யவேண்டும். இதற்காக சில உத்தியோகத்தர்களை நியமிப்பது மிகவும் பொருத்தமானது. இதைவிட இ. போ. ச பஸ் வண்டிகளில் இருக்கும் இடப்பெயர்களும் பல பஸ்களில் தனிச்சிங்களத்திலேயே இருக்கின்றது. தமிழ்பிரதேசங்களில் ஓடும் பஸ் வண்டிகளில் கூட இதே கதிதான், ஆகவே போக்குவரத்து அமைச்சருடன் தொடர்புகொண்டு நாட்டில் ஓடும் சகலபஸ்வண்டிகளிலும் தமிழிலும், சிங்களத்திலும் இடப்பெயர்களை எழுதுவிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

9. அரசியலமைப்பின் 24ம் உறுப்புரையின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களின் மொழிதமிழாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றின் பதிவேடுகள் தமிழில்இருத்தலும் வேண்டும். அத்தகைய ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அத்தகைய மேன்முறையீட்டை விளங்கும் நீதிமன்றத்தில், பயன்பாட்டுக்கெனப் பதிவேடுகள் தேசிய மொழிகளாகிய தமிழிலும், சிங்களத்திலும் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் தெரிந்த நீதிபதிகளே நியமிக்கப்படவேண்டும் என்பதை எடுத்துக்காட்டத் தேவையில்லையென நம்புகிறோம். அரசியலமைப்பு 24ம் உறுப்பில் கூறப்பட்டிருக்கும் சட்டவாக்கமொழியும் நீதிமன்றங்களின் மொழியுமென்ற விவகாரத்துக்கு சரியான வரைவிலக்கணம் எடுத்து தமிழ் மொழிக்கு வேண்டிய இடத்தைக் கொடுக்குமாறு கௌரவ நீதியமைச்சரை நெறிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

10. இதைவிட சட்டத்தையும் நீதியையும், நிலைநாட்டும் பொலிஸ் ஸ்ரேசன்கள் ஒவ்வொன்றிலும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றவேண்டும். தமிழ் பேசும் மக்களின் வாக்குமூலங்கள் தமிழிலேயே பதிவுசெய்யப்படவேண்டும். தமிழ்தெரியாத பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருப்பதால், தமிழ் மக்களுக்குத் தெரியாத, விளங்காத மொழியில் அவர்களுடைய வாக்குமூலம் பதிவு செய்தல் சட்டவிரோதமாக்கப்படவேண்டும். மேலும் தமிழ் மக்களிடையே நிலவும் விசாரணைகளை தமிழ்தெரியாத உத்தியோகத்தர்கள் விசாரிப்பது தடைசெய்யப்படவேண்டும்;

11. சுருக்கமாகச் சொல்லுமிடத்து புதிய அரசியலமைப்பில் தமிழ்மொழிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்து உரிமை யாவும்சட்டரீதியாகக் காப்பாற்றப்பட நீங்களே பொறுப்பாகஇருக்கவேண்டும். அரசியலமைப்பில் தெரிவித்திருக்கும்படி தமிழ்மொழி அமுலாக்கத்தை செவ்வனே நடைமுறையிற் கொண்டுவந்தால், தமிழ்மக்களுக்கும், தமிழுக்கும் நீங்கள் செய்யும் சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். தமிழ் மொழி அமுலாக்கத்தை நடைமுறைக்கு கொண்டுவருவது சுலபமல்ல. ஆனால் நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைத்து அரசியலமைப்பில் கொடுத்த உரிமைகளை அடையவேண்டும். இந்தச்சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்ததையிட்டு நீங்களும் நாங்களும் பெருமைப்படவேண்டும். தமிழ் மொழி அமுலாக்கலுக்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பும் தந்துதவுவோம் என்று கூறுகிறோம்.

(அ)

# யாழ்ப்பாணத்தில் திருட்டுப்போன 20 சைக்கிள்கள் கிளிநொச்சி, வவனியா, மன்னரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சைக்கிள் திருட்டுக்கள் தொடர்பாக இளைஞர் ஒருவரைக் கைதுசெய்துவிசாரணை நடாத்திய பொலிசார் அவரால் களவாடப்பட்டு விற்றதாகக் கூறப்படும் 20 சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

அரியாலை திருமகள்வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவதாஸ் என்பவரது நண்பர்களெனக் கூறப்படும் யாழ் கோவில்வீதியைச் சேர்ந்த துரைரத்தினம், சைக்கிள் திருத்தும் கடை பெரன்றின் உரிமையாளரான நாகராசா (கிளி) ஆகியோரும் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் பல சைக்கிள்களைக் களவாடி அதன் உறுப்புக்களை மாற்றி விற்பனை செய்துவருவதாக யாழ் பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து யாழ் குற்றத்தடுப்புப் பொலிசார் சிவதாஸ் என்பவரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்திய பின் இவர்களால் திருடி விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் 20 சைக்கிள்களை மன்னர், வவனியா, கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து கைப்பற்றியுள்ளனர்.

இத்திருட்டில் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் மற்றும் இருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

யாழ் குற்றத்தடுப்புப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர்களான திரு பிரேமதாஸா, திரு முத்துபண்டா, கான்ஸ்டபிள் திரு எஸ் ஜோர்ஜ் ஆகியோர் மேற்படி சைக்கிள்களைக் கைப்பற்றினர்.

இச்சைக்கிள்கள் யாவும் 1976ம் ஆண்டுமுதல் 1979ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் களவாளப்பட்டு விற்கப்பட்டதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது. சைக்கிள்களைக் களவுகொடுத்தவர்கள் களவுகொடுத்த சயிக்கிள் பற்றுச்சீட்டுடன் யாழ் பொலிஸ்நிலையத்திற்கு வந்து தங்களின் சயிக்கிள்களை அடையாளம்காட்டுமாறும் பொலிசார் தெரிவித்தனர். (பொ-கு)

## அரசுக்கெதிரான துண்டுப்பிரசுர விநியோகம்: சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அரசுக்கெதிராகவும், இரு இனங்களுக்கிடையிலுமுள்ள ஒற்றுமையை குலைக்கக்கூடிய வகையிலும் துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்ததாகவும், விநியோகித்ததாகவும் குற்றம் சாட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களையும் யாழ். நீதவான் திரு நிஹால் திஸநாயக்க நேற்று சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்.

தயிலுநிலைவச்சேர்ந்த ஜெகதீஸ்வரன், சிவராஜலிங்கம் ஆகிய இரு இளைஞர்களையும் மருதனார்மடப் பொலிசார் கைது செய்து மாளிகாவத்தை நீதிமன்றத்தில் ஆஜர்செய்த போது, நீதவான் இவர்களை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்திருந்ததைத் தொடர்ந்து இம்மாதம் 13ம் திகதி யாழ். நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்தனர்.

அன்று இவர்களுக்குஎதிரான முறைப்பாடுகள் எதையும் பொலிசார் சமர்ப்பிக்காததால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட போது எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகள் கடந்த தவணையின்போது நீதிபதியின் கட்டளைப்படி பொலிசார் இம்முறையும் முறைப்பாட்டைச் சமர்ப்பிக்காததையும் 46 நாட்களுக்கு விளக்க மறியலில் வைத்திருப்பதையும் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, இவர்களை விடுதலைசெய்த நீதவான் ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி மீண்டும் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் ஜிம்மி இராசரத்தினம், எஸ். கே. மகேந்திரன், கே. கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் ஆஜராகினர். (கு)

## தமிழ்மக்களிடம் போதிய கட்டுப்பாடு இல்லை

### அமிர்தலிங்கம் கவலை

(சுழிபுரம்)

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து வாழ்வதே சாரணிய இயக்கத்தின் நோக்கமாகும். பிஞ்சு உள்ளங்களில் நல்ல விதைகளை விதைப்பதன் மூலமே நாட்டில் நல்ல சமூகத்தை உருவாக்கலாம். இன்றைய தமிழ் மக்களிடம் போதிய கட்டுப்பாடு இல்லை, இந்த நிலை மாறவேண்டும், கட்டுப்பாடு இல்லாது சின்னாபின்னமாக இருந்த யூத இனம் ஓர் கட்டுப்பாட்டுக்குள் அமைந்ததால் இன்று உலகநாடுகளில் தமக்கென்று ஓர் நாட்டை அமைத்து சிறப்புடன் வாழ்ந்துவருகின்றது. இதனைமனதில்கொண்டு எமது இளம் இளைஞர்கள் சாரணியக் கருத்துக்களை நன்கு கற்று ஒழுக்கம் கட்டுப்பாடு மிக்கவர்களாக வாழ முன்வரவேண்டும்"

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சாரண சாரணிய இயக்க ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு கே அருணாசலம் தலைமையில்நடைபெற்ற விழாவின் ஆரம்பத்தில் மாணவர்களின் பாசறைக் கைப்பணிக் காட்சிகளை திரு அமிர்தலிங்கம் பார்வையிட்டார்.

கல்லூரி சாரண ஆசிரியர் திரு எஸ் இரத்தினதுரை வரவேற்புரை நிகழ்த்தினார். திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில்: தமிழ்மக்கள் ஏனைய இனத்தவரைவிட கட்டுப்பாடு இல்லாதவர்களாக வாழ்கின்றனர் எங்கும் எதிலும் கட்டுப்பாடு இல்லை எறும்புகள்கூட மிகுந்த கட்டுப்பாட்டுடன் ஒழுங்காக வாழ்வதை நாம் காண்கின்றோம் என்றார்.

வட்டுக்கோட்டை எம் பி திரு அ திருநாவுக்கரசு பேசுகையில்: "யாழ்ப்பாணத்தில் எட்டுலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள், இதில் மூன்று லட்சம் மக்கள் வவனியா, திருக்கோணமலைப் பகுதிகளில் சென்று குடியேறவேண்டும். அப்படிச் செய்வதன்மூலமே நல்ல கல்வியையும், பல வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும். எமக்கு சாரணியம் போதிக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தியாகம், சேவை ஆகியவற்றை மனதில் கொள்ளவேண்டும் என்றார்.

யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த பலரும் உரையாற்றினர், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (கு)

## திருமுறை மன்ற மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

நீராவியடி விரகத்திவிநாயகர் கோவிலில் நாளை வெள்ளிக்கிழமை மணிவாசகர் குருபூசை நடைபெறவிருக்கிறது. யாழ் திருமுறை மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இவ் விழாவில் மன்ற மாணவ மாணவிகளின் திருமுறை பாராயணமும் இடம்பெறும்

## பருத்தித்துறையில் சுய அமைப்பில் 90 வீடுகள்

(புலோலி)

பருத்தித்துறையில் சுய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் மேலும் 90 வீடுகள் கட்டப்படவுள்ளன.

கற்கோவளத்தில் 50 வீடுகளும், நாகர்கோவிலில் 40 வீடுகளும் கட்டப்படவுள்ளன. தேசிய வீடமைப்புத் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திரு. எஸ். இராமலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலுமயிலும ஆகியோர் அண்மையில் இப்பகுதிகளுக்குச் சென்று இவ்வீடுகள் கட்டப்படவுள்ள நிலங்களைப் பார்வையிட்டனர் (கு)

## உடையார்கட்டு கொலைவழக்கு: விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

உடையார் கட்டுகொலை வழக்கில், சாட்சி முரண்பாடு காரணமாக விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமிக் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் உடையார் கட்டில் 78 ஏப்ரல் 22-ம் திகதி குலசேகரம் ஜெகதீஸ்வரன் என்பவரைச் சுட்டுக் கொலை செய்ததாக செல்லையா சின்னத்தம்பி, தம்பிமுத்து சிவஞானம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி சி. சுரேந்திரனின் உதவியோடு ஆஜரானார். 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி. சுரேந்திரன் ஆஜரானார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி வி என் நவரத்தினம் குறுக்குவிசாரணையின் போது, சாட்சி நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திற்கும், பொலிஸ் நிலையத்தில் அளித்த வாக்குமூலத்திற்கும் உள்ள முரண்பாடுகளை நீதிமன்றத்தில்சமர்ப்பித்தார்.

இரண்டு சாட்சியங்களுக்குமிடையே முன்னுக்குபின் முரண்பாடுகள் இருப்பதனால், வழக்கை தொடர்ந்து நடத்துவதில் பிரயோசனமில்லையென ஜூரிசபையினர் ஏகமனதாக தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (கா)

## புகார் மீது...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யாழ் பெரியாஸ்பத்திரி வைத்தியர்கள் சங்கத்தினர் பெரியாஸ்பத்திரியில் டாக்டர் ஒருவருக்கும் மரணவிசாரணை அதிகாரிக்குமிடையில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரி நேற்றுக்காலை வேலை நிறுத்தம் செய்தனர்.

யாழ் பொலிஸ் அதிபர் திரு லியோ பெரேரா இச்சம்பவம் குறித்து உடன்நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து டாக்டர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

மரணவிசாரணை அதிகாரி திரு பிரான்ஸிஸின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

இச் சம்பவம் குறித்து திரு பிரான்சிஸும் பொலிஸில் புகார் ஒன்றுசெய்துள்ளார். (கா)

## யாழ்.டாக்டர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் கான்ஸ்டபிள் தடுத்தார்.

### வைத்திய சங்கம் கூடியது

இச்சம்பவத்தை அடுத்து, நேற்றுக் காலை யாழ் பெரியாஸ்பத்திரியில் அரசாங்க வைத்திய சங்கம் அவசரமாக கூடி நான்கு தீர்மானங்களை நிறைவேற்றியது.

### நோயாளிகள் பாதிப்பு

நேற்று நண்பகல் வரை டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்ததால், வார்ட்டுகளிலுள்ள நோயாளிகளும், வெளி நோயாளிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

யாழ் பொலிஸ் அதிபர் திரு எம் ஈ பீ லியோ பெரேரா, கடிதமூலம் இச்சம்பவம் தொடர்பாக உடன் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து டாக்டர்கள் நண்பகல் 12 மணிக்கு வேலைநிறுத்தத்தை கைவிட்டு வழமையான கடமைக்கு சென்றனர். (கா)

## யாழ்ப்பாணக் கல்லூரித் தினம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தின் நிறுவன தினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. திரு ஐ பி துரைரட்னம், திருமதி ரூபேட் ஹொலிமேஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (கு)

## இன்று

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சைவ இளைஞர் மன்றத்தின் உரை அரங்கு நிகழ்ச்சி, இன்று பிற்பகல் புங்குடுதீவு பெருங்காடு வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும், புலவர் ஈழத்துச் சிவானந்தன் "கடவுளைக் காட்டு" என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

## வகுப்பறை தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வகுப்பொன்று கடந்த வெள்ளியன்று தீக்கிரையானது.

இதுகுறித்து பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இவ்விஷயத்தைக் கண்டிக்குமுகமாக நாயன்மார்கட்டு இளம் தமிழ் இலட்சியவாதிகள் கழகம் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.


## பகிரங்க ஏல விற்பனை

இரும்பு கழிவுப் பொருட்கள் எம்மிடம் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்குண்டு.

இடம்: சி நோர் அபிவிருத்தித்திட்ட நிறுவனம், துறைமுகம், காரைநகர்.

காலம்: 1979 ஜூன் 30-ந் திகதி சனிக்கிழமை

நேரம்: காலை 9 மணி

முக்கிய கவனிப்பு: முழுத் தொகையையும் உடனே செலுத்தி பொருட்களையும் இரண்டு நாட்களுக்குள் எடுக்கவேண்டும்.

சி நோர் அபிவிருத்தித்திட்ட நிறுவனம்,
காரைநகர்.

27-6-79. 2881



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

அதன் தலைவரும் யாழ்ப்பாண மாநகரசபை முதல்வருமான மாண்புமிகு திரு. இ. விசுவநாதன் அவர்களைக் கௌரவிக்குமுகமாக 18-7-79 புதன்கிழமை மாலை 5 மணியளவில் குமாரசுவாமி மண்டபத்தில் தேநீர்விருந்தொன்றை அளிக்கத் தீர்மானித்துள்ளது.

கலந்துகொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் 5-7-79க்கு முன் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். (2879)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Vasegistesed as a Newspaper at the Gescial PostOffice Sri Lanka under NoQB/8:43/78 The Eelanadu P B No: 49; Tvlegrams: Eelanadu
Booi; 889.